## CHAIRMAN'S DESK

It gives me a great pleasure to wish you all a prosperous future. With the investment of persistence and confidence, the college has been built up. It provides quality education bequeath our students with the thought – provoking and supportive atmosphere. I wish to afford our students an enriched learning experience.

The wisdom that you gain, good character you imbibe will be your major contribution to the parents, to society and to nation. There would be strong challenges to great efforts but great efforts bear the sweet fruit of success.

"Though fate – divine should make your labour vain;
Efforts its labour's sure reward will gain"

- Thirukkural

## SECRETARY'S DESK

Our institution creates a milestone by providing quality education to the people from rural background. It is a matter of immense pleasure that the students of our college are attaining excellence in all the fields of academic, cultural and sports. Besides the academic development, other aspects such as communication skills, leadership qualities and self-discipline, are being focused.

"Effective leadership is not about making speeches or being liked; leadership is defined by results, not attributes"

- Peter F Drucker

Leadership is not a person or a position. It is a complex moral relationship between people based on trust, obligation, commitment, emotion and a shared vision of the good. The skill of leadership provides young minds in a resounding success in all their endeavours.

## PRINCIPAL'S DESK

This is one of the prestigious institutions that provide unique opportunities for the development of young minds.

> **"Educational Institutes are temples of learning, with education and knowledge as the Goddess, Teachers as its Priests and Students as its Devotees"**
>
> **- Jawaharlal Nehru**

Our aim is to produce excellent professionals ready to serve the corporate sector, with exemplary stamina, courage, compassion and dedication to duty. The college maintains tradition of inculcating humanvalues in the minds of the younger generation. We takepains and efforts for their physical, mental and intellectual developments.We educate the children in an enjoyable process and not an imposed, dreary and dull syllabus cramming only.

We have a dedicated team of faculty, striving hard to provide the students with the latest knowledge and skills. It would help them to stand out in this fiercely competitive world. Our campus is vibrant with energy, enthusiasm and activity. The environment is congenial for learning opportunities and exploitsyour potentials.

> **"Education is the ability to listen to almost anything without losing your temper or your self-confidence"-Robert Frost**

## VISION

Education with empowerment and make individuals to have social responsibility and to be the enlightened citizens of India

## MISSION

- To identify the full potential of students.
- To create a community of learners with quality.
- To extend the educational horizon with technical vistas.
- To provide peaceful and conducive learning atmosphere.
- To analyse the future trend and to transform our students into industry ready learners, in short degree in one hand and future in another hand.

## சிறகடிக்கும் சிறகுகளின் வாழ்க்கை

வேறு கூட்டில் பிறந்தாலும்

ஒரே கூட்டில் வளர்ந்தோம்!

கல்லூரி என்ற கூட்டில்

நிகழும் தடைகளை மறந்து

உயரத்தில் செல்லும் குருவியாய்

சிறகடித்தோம்!

சாதத்தை பகிர்ந்துண்டு

விடைத்தாளையே பகிர்ந்து கொண்டு

தேர்விலேயே தேர்வானோமே!

நம் மேஜை கூட நினைஊட்டுகிறது

கருதி வேறுபாடுன்றி

கூடி மகிழ்ந்தோம்!

தண்டனை வாங்கி ,ன்று கூட

வெளியே நிற்கின்றோம்!

நம் அறிவை செதுக்கும்

நூலகமும்

நம் தைரியத்தை சோதிக்கும்

விளையாட்டு மைதானமும்

நம் கல்லூரியில் தனிமையில்

கையைத் தட்டுகிறது

நம்முடைய இலக்கை எண்ணியே!

நம் சிரித்த சிரிப்பும்

நமக்கு கிடைத்த அன்பும்

கொண்டாடிய விழாவும் நம்

தாண்டிய தடையும்

ஒரு பக்கமாய் இல்லை என்

இதயத்தின் புத்தகமாய் உள்ளது

கடற்கரையில் எழுதிய

எழுத்து போல் ஆனது
நம் கல்லூரி பயணம்!
கடல் அலைகள் போன்று பல
நினைவுகளையும் எடுத்து செல்கிறது
நம் அனுபவத்தின் ஊடகமாக?
நம் கல்லூரி வாழ்வு.

S. லெட்சுமி பிரியா
இரண்டாம் ஆண்டு உயிர் வேதியியல்




M.BALA SASIKALA
DMLT

## எண்ணம் பல வண்ணம்

காகிதத்தில் எழுதினேன்
கவிதையானது!
உணர்வுகளால் வரைந்தேன்
ஓவியமானது!
காட்சிகளால் கடத்தினேன்
படமானது!
மனசாட்சியோடு நடந்தேன்
வாழ்க்கைப்பாடமானது!
கனாவில் கண்டேன்
கற்பனையானது!
எண்ணமே யாதுமாகி
ஆழ்கிறது
எழுத்தறி வித்தவன்
இறைவன்
நல்எண்ணத்தை விதைத்தவன்
வெற்றியாளன்!

மு. தர்ஷினி
மூன்றாமாண்டு ஆங்கிலம்




**FACTS**

- The earth's average Velocity orbiting the sun Is 107,220 km per hour?
- There is enough fuel in a full tank of jumbo jet to drive an average car four times around the world.
- Sunlight takes about 8 minutes and 20 seconds to reach the earth at 186,282 miles/sec (299,792 km/sec).

P.ABINAYA SRI

III – B.COM




## எம்சமூக நிலை மாறுமா?

புத்தகம் தூக்க வேண்டிய வயதில்

எம் மாணவர்கள் பிள்ளைகளை சுமக்கின்றான்

எப்போது மாறும் எம் சமூக நிலை?....

எம் மாணவ செல்வங்களே!

பிள்ளை பருவத்தினை முழுமையாக

அனுபவிக்காமல் உங்களுடைய

பிள்ளைச் செல்வங்களுக்கு

எதை கற்றுக் கொடுக்க போகின்றீர்கள்!


தொழில்நுட்பம் ஆயிரம் வளர்ச்சி

நிலையை அடைந்திருந்தாலும்,

என் சமூகம் மட்டும் இன்றும்

வாழ்வியலில் ஐம்பதுவளர்ச்சி கூட
அடையவில்லையே! இரு பாலினத்தவரும்
சமம் என்றும் கூறிக்கொண்டு அவர்களிடையே வேற்றுமைகளையும்
விதைத்துக் கொண்டே
தான் இருக்கின்றோம் எப்போது
மாறும் எம் சமூக நிலை?....
தம்மை தாழ்த்தி மற்றவர்களை
முன்னிறுத்தி வளர்த்து விட்டோம்
தற்போதோ, தன்னைவிட பிறரை
தாழ்த்துவரையே பணியாக
செய்துவருகிறோம் என்று
மாறும் நம் சமூக நிலை?...
சிறு குழந்தைகளை தம்
குழந்தைகளாக பார்க்கும்
காலம் போய் காமத்திற்காக
பயன்படும் போதைப் பொருளாக
பார்க்கும் அவல நிலையில்
உள்ளதே! என்று மாறும் நம்
சமூகநிலை?...

மு. கார்த்திகா
உதவிப்பேராசிரியை
வணிகவியல் (கணினி பயன்பாட்டியல்)



A.AARON

I-BCA

**நண்பன்**

ஒரு நல்ல நட்பிற்கு வயது என்பது என்றும் தடையில்லை,
காசு பணமும் முக்கியமில்லை, கருத்து வேறுபாடு
வந்தாலும் பிரிவு வருவதில்லை, என்றும் மாறாத
குணம், உரிமையுடன் பழகும் மனம் இதைவிட வேறு
ஒன்றும் தேவையில்லை நண்பன் இல்லை எனில்
இந்த உலகில் வாழ்க்கை இல்லை.


மு.பிரியதர்ஷினி

மூன்றாம் ஆண்டு கணினி பயன்பாடு


**RIDDLE**

- What has to be broken before you can use it?

  An Egg

- What is full of holes but still holds water?

  A Sponge

- What is always in front of you but can't be seen?

  The Future

- What can you break, even if you never pick it up or touch it?

  A Promise

- What question can you never answer yes to?

  Are you asleep yet?


R. SHALINI


I - B.Sc. Bio Chemistry

**கல்வி**

உலகில் சிறந்தது கல்வி உன் வாழ்க்கைக்கு
அவசியமானதும் கல்வி உலகில் ஒளி பரப்பும்
கல்வி உன்னிலும் ஒளிபரப்பும் தேவை என்று
கற்றால் உன் உதிரமாய் ஓடும் நீரீல் மலரும்
தாமரை உன் வாழ்வில் மலரும் கல்வி...
படிப்பு என்னும் படியை ஏறு சொர்க்கம்
என்னும் சோலை உனக்கு
புத்தகம் என்னும் செடியை அறிவு என்னும் வேரால் தாங்கும்
பூக்கள் என்னும் புனிதமான வாழ்க்கை கிடைக்கும்

M. ஜஸ்வர்யா

முதலாமாண்டு உயிர் வேதியியல்



L.DILA

BA.ENGLISH

**FRIENDSHIP…**

Good friends are like shallow water

So please stay with your friends

Don't miss them …

**BELIEVE YOURSELF…**

You don't feel about

You don't have anyone…

You are the great companion to you

Believe yourself first…!

**SMILE …**

Smile when you feel lonely…

Because smile can

Reduce your anxiety…

**THINKING...**

Positive thinking makes

Perfect things…

A. SANIYA
III-B.COM

**உண்மைகள்**

- ஷாம்பு என்கிற வார்த்தை இந்தியாவில் இருந்து உருவானது. ஷாம்புவானது இந்தியாவில் தான் கண்டுபிடிக்கப்பட்டது.
- வணிகரீதியாக விற்கப்படும் ஷாம்புகள் அல்ல. இந்தியர்கள் மூலிகைகளாய்ப் பயன்படுத்தியுள்ளனர். அதற்கு ஷாம்பு என பெயர் வைத்துள்ளனர்.
- அதுவே பிறகு ஷாம்பு என ஆனது. ஷாம்பு என்பது சமஸ்கிருத வார்த்தையாகும். அதற்கு **மசாஜ் செய்வது** என்பது பொருளாகும்.

**தீவுகள்**

உலகிலேயே சுவீடன் நாட்டில் தான் அதிகமான தீவுகள் இருக்கிறதாம் அந்நாட்டில் 221800 தீவுகள் இருக்கிறதாம். அதில் 1000க்கும் மேற்பட்ட தீவுகளில் மனிதர்கள் கிடையாது.

R. ஷாலினி

முதலாமாண்டு உயிர் வேதியியல்



S.AJAY

III- B.COM(CA)

**மலரின் பெருமை**

காலை நேரப் பனியினிலே

கவலை இன்றி பிறந்து விட்டேன்

நானும் ஒரு மலர்தானே

காலைக் கதிரவன் வருகை கண்டு

கடமை செய்ய மலர்ந்திட்டேன்

புஸ்பம் என்றொரு பெயர் எனக்கு தானே

மண்ணில் மாந்தர் யாவர்க்கும்

மகிழ்வுடன் என்னை தந்திட்டேன்

எனக் கென்றோர் மனம் நான் அறியேனே

கவிஞன் இதழால் பண்பாடி

காதல் பூ ரோஜா நான்தானே

மலர் சிந்திக்க…

புலவன் விழியால் எனை நிருத்தி

காவியப் பூ நான் தான் என்றனே

M. சக்தி ஜஸ்வர்யா


முதலாமாண்டு உயிர் வேதியியல்

**LET'S LEARN**

- Meleomania - One who loves music
- Melophile - One who loves melody
- Selenophile - One who loves moon
- Nemophilist - One who loves forest
- Philomath - One who love mathematics
- Technophile - One who loves technology
- Logophile - A lover of words
- Solivagant - One who wanders alone
- Dendrophile - One who loves trees
- Pluviophile - One who loves rain
- Autophile - One who loves solitude & being alone
- Heliophilia - One attracted or adapted to sunlight
- Cynophilist - A person who is fond of dogs

D.NEGOMI

I - BCA




A.ANALORPAVA
BRITNI
DMLT

**<u>தமிழ் மொழி</u>**

தரணியிலே கால் பதித்த என்னை

அள்ளித் தழுவிய தாய்மொழி

தவமாய் தவமிருந்து யான் பெற்ற மொழி

ஆசிரியர்களால் என்னைக்

கவர்ந்த மொழி

தமிழாசிரியையாய் என்னை
மாற்றிய மொழி
மாணவர்களுக்கு கற்றுக் கொடுக்க
உதவிய மொழி
இளமைக் குன்றாமல் இனிக்கும் மொழி
இளங்கவிதையாய் நாவில் தவழும் மொழி
தமிழ் மொழியைக் கற்றுப் பார்
உலகத்தையே சுட்டிக்காட்டலாம்
தமிழை சுவாசித்துப் பார்
உன் தாய் மடியில் தவழ்ந்ததைப்
போல் உணர்வாய்
தமிழ் மண்ணிலே பிறந்து
தமிழ் மண்ணிலே வளர்ந்து
தமிழ் நாட்டு சோற்றை உண்டு
தமிழ் நாட்டு நீரைப் பருகி
தமிழ் கலாச்சாரத்தை பின்பற்றிவிட்டு
தமிழை வெறுத்து
தமிழை அவமானப்படுத்தி
இரவல் மொழிக்கு
ஏங்குகின்ற தமிழனே!
நீ ஒரு தமிழனா? இல்லை ஆங்கிலேயனா?
துமிழா தமிழை நேசித்துப்பார்
தமிழ் உன்னை நேசிக்கும்
தமிழுக்கு எனது நன்றி!!!

த. கவிதா
உதவிப்பேராசிரியை
தமிழ்த்துறை

## QUOTES

- "Don't worry about people stealing your design work.

  Worry about the day they stop".
- "Chase the vision not the money

  The money will end up following you".
- "Always deliver more than expected"
- "Your most unhappy customers are your greatest source of learning"
- "Innovation distinguishes between a leader and a follower".

S.TAMILROJA

III – B.COM (CA)



M.GAYATHRI I-BSC (CS)

## TONGUE TWISTERS

- Six sick hicks nicks six slick licks with picks and stick
- Susie works in a shoeshine shop, where the shines she sites, and where she sits she shines.
- Swam swam over the sea swim, swan, swim! Swan swam back again. Well swam, swan!

M. Karthika

Assistant Professor

Dept. of Business Administration

### அம்மா

நான் அழுதபோது என்னை

சிரிக்க வைத்த முகம்

என்றுமே என்னை வெறுக்காத குணம்

தவறுகளை மன்னிக்கும் மணம்

அளவுகளே இல்லாத பாசம்

மற்றவர்கள் காட்டிடாத நேசம்

அனைத்தையும் உன்னிடம் கண்டேன்

அம்மா

S. பவதாரணி

முதலாம் ஆண்டு கணினி பயன்பாட்டியல்

## Did You Know

- The length from your wrist to your elbow is the same as the length of your foot
- The names of the three wise monkeys are Mizaru (see no evil), Mikazaru (hear no evil) and Mazaru (speak no evil)
- The feature cookie was invented in San Francisco
- A hippo can open its mouth wide enough to fit a four foot tall child inside
- 55% of people Yawn within 5 minutes of seeing someone else Yawn
- Thomas Edition, who invented the light bulbs was afraid of the dark
- A blue Wahl’s tongue weighs more than an elephant
- The earth is struck by lightning over 100 times every second

J.Jerolin Santhiya

III-B.A (English).



M.HARINI
III-BA.ENGLISH

**அப்பா**

சொல்லாத மொழிகள் எல்லாம் சொல்லத்தான் நீயும் வந்தாய்
நான் பேசும் மொழிகளுக்கெல்லாம் அர்த்தங்கள் தேடிகொண்டாய்
விழிமூடி நானும் தூங்க விடியாமல் பார்த்துக்கொண்டாய்
உன் விழி என்னும் விண்மீன் கொண்டு இரவையும் நீட்டிச் சென்றாய்
சூரியனை வேண்டாம் என்றாய்
உன் பாதம் சுடுமே என்று
நடைபழகி நானும் கொள்ள நடைவண்டி நீயே ஆனாய்
உன் முகம் பார்க்கும் போதெல்லாம் புன்னகை மட்டும் தந்தாய்
சின்னசின்னகதைகள் சொல்ல செல்லமாக நானும் தூங்க
சிறு காகிதகப்பலும் மூழ்காதென்று நம்பிக்கையாய் நீயே வந்தாய்
நிலவு கூட தேய்ந்து கொண்டு மறைந்து விடுகிறது
செல்லமான அப்பாவே உன் இருவிழி இமைகள் மூட மறுப்பதும் எனக்காக
வண்ணத்துப்பூச்சி என என் வாழ்வெல்லாம்
வண்ணங்கள் பூச உன் வாழ்வின் மொத்தத்தையும் எனக்காகதந்தாய்
ஆனந்தம் என்ற சொல்லே இங்குவேண்டாம்
என் அப்பா இருக்கையிலே!

க.சுஸ்மிதா
முதலாம் ஆண்டு கணினி பயன்பாட்டியல்

## GENERAL KNOWLEDGE

- Who invented computer and when?
  Charles Babbage (1882)
- What was the world’s first personal computer?
  The Micral N (1973)
- Who founded Google and when?
  Larry page and Sergey brin in September 4, 1998
- Who started Apple Company?
  Steve Jobs Steve Wozniak and Ronald Wayne
- Who is the real founder of what Sapp?
  Jan Koum

- Who are the founders of Facebook?

  Mark Zuckerberg, Eduardo Saveir, Andrew McCollum

- By whom instagram was launched and when?

  Kevin Systrom in 2010

- What was the first smartphone?


  IBM Simon

- Who is the real inventor of Wi-Fi?

  Hedy lamarr [Austrian – American Actress]

C.MARIA STELIN

I –BCA




L.DILA

BA.ENGLISH

**மகிழுங்கள்!**

இதோ நான் பிச்சைக்காரக்குழந்தை
என் அவல நிலையில் என்னைப் பார்!
போராடும் வலிமை இல்லாத என்னைப் பார்!
இதோ நான், உடைந்த ஆன்மா
முழுமையடைய சிறிய வாய்ப்புடன்
என் ஆவி நீண்ட காலமாக கீழே நசுக்கப்பட்டது
அலட்சிய பாதங்கள் கடந்து செல்வது
இதோ நான் பிச்சைக்காரக் குழந்தை!
என்னுடையதுடன் ஒப்பிடும்போது உங்கள் நிலை லேசானது
என்னோடு ஒப்பிடும்போது நீங்கள் அரசர்களைப் போல் வாழ்கிறீர்கள்
என்னைப் பொறுத்தவரை, மிகக்குறைந்தவர்களிடம் எல்லாம் இருக்கிறது
இந்த இளம் ஆன்மா, வறுமையில் கூண்டோடு வாழ்கிறது
இதோ நான் பிச்சைக்காரக் குழந்தை!
பெரும்பாலானவர்களுக்கு நான் எப்படியோ தீட்டுப்பட்டிருக்கிறேன்
உண்மையில் அக்கறை கொண்டவர்களை நான் பார்த்தது குறைவு
நானும் என்னைப் போன்ற மற்றவர்களும் எப்படி இருக்கிறோம்
நீங்கள் என்னைப் பார்க்கிறீர்கள் ஆனால் நீங்கள் கவலைப்படவில்லை!
உங்கள் மூக்கை காற்றில் வைத்து என்னை கடந்து செல்கிறீர்கள்
குற்றமற்ற எனினும் உங்கள் பார்வையில் தீட்டு
இதோ நான் பிச்சைக்காரக் குழந்தை!!

நா.வெண்ணிலா
முதலாம் ஆண்டு கணினி பயன்பாட்டியல்




M.MANJU

II-B.COM(CA)



S.PRATHIKSHA

III- B.COM


## 10 Crazy Facts You Didn't Know About

## "SPACE"

- Space is completely silent
- The hottest planet in the solar system is 450 degree  centigrade
- A full NASA space suit costs $12000000
- The sun's  mass take up 99.86% of the solar system
- One million earth can fit inside the sun
- There are more trees on earth than stars in the milky way
- The sun set on mass appears 'Blue'
- There are more stars in the universe than grains of sands on earth
- One day on 'Venus' is longer than one year
- There is a planet made of Diamonds "Super earth"

C.
Maria Stelin

I - B.C.A.



M.PARKAVI BHARATHI
III-BA.ENGLISH

**நண்பன்**

மிச்சம் இருக்கும்

குளிர்பானத்திற்காக

சண்டையிட்டு வெல்கின்றாய்

சிந்தி விழும்

கண்ணீரைத் துடைத்திட

உன்னையே தருகின்றாய்!

தடுக்கி விழும்போது

கிண்டல் செய்கின்றாய்

தடுமாறி விழும்பொழுது

தோள் கொடுத்து தூக்குகின்றாய்…

மு. அர்ச்சனா


மூன்றாம் ஆண்டு கணினி அறிவியல் துறை

## Biochemistry Quotes

- The quality of your life is dependent upon the quality of the life of your cells
- If the bloodstream is filled with waste products, the resulting environment
- Does not promote a strong, vibrant, healthy cell life-nor a biochemistry
- Capable of creating a balanced emotional life for an individual

B. Pooja

III – B.Sc. Biochemistry


A.NANTHINI
III-B.SC(CS)

**கவிதையின் உயிர் அம்மா**

பாசம் என்னும் சிறைக்குள் ஆயிரம்

கைகளால் பாதுகாத்த அன்னையே…..

உன் அன்பிற்கு இணையாய் என்னிடம்

வேறு உண்டோ….

துணையாய் காட்டி செல்லும் நேரத்திலும்

முத்தமிடும் தூரத்திலும்…..

காண்கிறேன் உன் பாசம் என்னும்

போராட்டத்தில் நீ எனக்காக….

விட்டுக்கொடுத்த உன் தோல்விகளை

ர.தனலட்சுமி

முதலாம் ஆண்டு கணினி பயன்பாட்டியல்

**Riddles**

1. There was a green house. Inside the green house there was a White house there, there was a Red house. Inside the Red house there was a lots of babies. What is it?

   WATERMELON
2. What has a face and two hands but no arms or legs?

   CLOCK
3. What has a Neck but no Head?

   BOTTLE

M.Iswarya

I – B.Sc. Biochemistry

# திருவள்ளுவர்



**M.SARU MATHI**

**I-B.SC CHEMISTRY**

**மகாத்மா காந்தி**

போர்பந்தர் மண்ணில் பிறந்த உத்தமரே !

இந்திய விடுதலைப் போரை முன்னெடுத்த மகாத்மாவே!

அகிம்சையை ஆயுதம் ஆக்கி வெற்றி கண்டவரே !

எளிமையின் உருவமே! ஏழைகளின் தீபமே!

தீண்டாமையை தீ வைத்துக் கொளுத்த வேண்டும் என்று முழங்கிய தீர்க்கதரிசியே

உண்மையை தெய்வம் என்று உலகுக்கு உணர்த்திய உத்தமரே!!!

S. தாரணி


DMLT

## Interesting Facts

- Norway, situated in the Arctic Circle, is called the "Land of the midnight sun", where from May to late July, The sun actually never sets. This means that for around a period of 76 days , the sun never goes down
- Fingers prune under water not because of them absorbing the water but because of an evolutionary trait caused by the brain to enhance the grip of your fingers underwater
- Everyone has a different tongue print like finger print

N.Udhayaswathi

I – B.Sc. Biochemistry



R.RAJESWARI
BA.ENGLISH



G.THIVAN GANESH
I-BCA

# Did you Know...?

You take over 23,000 breaths everyday. ⇒






⇒ Drinking ice cold water burns about 1 calorie per ounce

Girafees only sleep 30 minutes in a 24-hour period ⇒





⇒ Penguins are able to jump 2 meters high!

Singing daily for atleast ten minutes reduces stress, can even help you live longer. ⇒





⇒ Wearing headphones for just an hour will increase the bacteria in your ear by 700 times

K.PRATHIPA
III-B.COM

**சிங்க பெண்ணே**

பெண்ணே!

பூ வாசல் திறந்து கொண்டு

பூ உலகை பார்ப்பதற்குள்

உன் காந்த கண்கள் இனி

கடும் நெருப்பை உமிழட்டும் கள்ளிப்பாலை ஏந்தி கொண்டு கிளவியவள் காத்திருப்பாள் தாய்ப்பாலை அருந்துகையில்

முதல் போராட்டத்தில் வெற்றிவாகை சூடுவாள்....

இனி தெளிவு மலரட்டும்.

நாணயத்தில் சிவந்த முகம் தான் கோணத்தை மாற்றட்டும் உருகும் உள்ளம் இனி உடையாமல்

இருக்கட்டும் தங்கச்சிலையே!

நாகரூபி

பி. ஏ. ஆங்கிலம் இரண்டாம் ஆண்டு

**அப்பாவின் அரவணைப்பு**

என் அம்மா என்னை வயிற்றில் சுமந்தாலும் ஆயள் வரை என்னை நெஞ்சில் சுமப்பவர் - என் அப்பா ஒருவர் மட்டுமே!

கவிதைக்கு இலக்கணம் அம்மா என்றால் அந்த அழகான கவிதையை எனக்கு பரிசளித்த கவிஞரே- என் அப்பா மட்டும் தான்

பெண்கள் வைக்கும் அன்பில் ஏமாற்றத்தை வைக்காத ஒரே ஆண் என் தந்தையாக மட்டுமே இருக்க முடியும் வாழ்வில் தான் பட்ட கஷ்டங்களை தன் பிள்ளை படக்கூடாது என்று நினைக்கும் ஒரே இதயம் இவ்வுலகில் அப்பா மட்டுமே கடவுளுக்கும் அப்பாவுக்கும் -ஒரு சிறு வித்தியாசம் மட்டும் தான் இறைவன் நாம் காணாத கடவுள் அப்பா நாம் தினம் தினம் காணும் கடவுள் எத்தனை ஜென்மங்கள் எத்தனை பிறவிகள் எடுத்தாலும் உன் மகளாக பிறக்கும் ஒரு வரம் வேண்டும்!

பெ. ஜிபிஷா

இரண்டாமாண்டு உயிர் வேதியியல்

# Learn more....



The earth's average velocity orbiting the sun is 107,220 km P/H.



A stroke of lightning discharges from 10 to 100 million volts & 30,000 amperes of electricity






Sunlight takes about 8 minutes & 20 seconds to reach the earth

There are more chickens in the world than people



A woman's heart beats faster than a man's heart while the average heart rate is 70 per minute in men, it is 78 per minute in women





MOST PEOPLE think that the heart is located on the left side of the chest. However, it is located centrally in the MIDDLE OF THE CHEST

K.PARITHIPA
III-B.COM

## **Facts of Human Body**

- A Sneeze can travel up to 99 miles per hour
- The human body is made up of 0.2 milligrams of Gold
- Your nose can remember 50000 different scents
- Babies are born without kneecaps
- The average human beings swallow one litre saliva a day
- There’s a protein in the body called Pikachu Rim
- Every person on this planet has an individual smell
- 80% of the brain is water
- A drop of blood contain 250 million cells
- Eating breakfast helps to burn 5 to 20% of calories throughout the body


M. Karthika

Assistant Professor

Department of Business Administration

# PUZZLES


1)





ANSWER :-

7 × 5 = 35 , 9 × 9 = 81 , 5 × 6 = 30 , 4 × 5 = 20

2)




ANSWER :-




= 12

R.NARMATHA
B.SC,BIO-CHEMISRY

**அம்மா**

மொழி அறியாப் பருவத்தில்

இதழ் சொன்ன முதல் வார்த்தை

உருவான கருவிற்கே கதை சொல்லி முகம் மலர்ந்தால்

சிசுவாக வந்தவளை சிரத்தையின்றி பேணிடுவாள்!

புடைத்த பரமனுக்கே படிகட்டு தாயாவாள்!

குருதிக் கடலுக்கே உருவான உருவம் என்னை வானிலே உலா வரும்

சூரியன் சந்திரனாய் எண்ணி எண்ணி மகிழ்ந்து வாழ்பவள்!.....

"அம்மா"!

J. எமிலியாணி

DMLT

**அப்பா அம்மா**

உருகொடுத்து உயிர் கொடுத்து பெற்றெடுத்தனர்.

நம்மை பிள்ளையாய் அன்பை

காட்டி தட்டிக் கொடுத்து கொட்டி வளர்த்தனர் பாசம் வெல்லமாய்....

ஆணிவேராய் ஆனவர்களே

தாங்கி பிடித்தனர் விழுதுமாய்......

எப்போதும் நம் நலனே.....

அவர்கள் உள்ளம் முழுவதுமாய்.....

கூறுவதுண்டு அவர்கள் நம்மை தவமிருந்து பெற்ற தாய்.....

அறிவோம் நாமே பெற்றோர்

நம் தவப்பலனால் உற்றத்தாய்


நம் மனதின் எண்ணம் அதை அவர்கள் உயிரில் கலந்த உணர்வால்...

அதுவே நிலைக்கும் அவர்கள் வாழ்வின் கணவாய்........

B. உமா மகேஸ்வரி


முதலாமாண்டு கணினி பயன்பாட்டியல்


# Interesting Facts...



All of the swans in England are the property of the Queen Disturbing or bothering them is considered a serious offence.

To make one kilo of honey, bees have to visit 4 million flowers, travelling a distance equal to 4 times around the earth





Penguins can swim but they cannot fly

K.PRATHIPA
III-B.COM

## **என் உயிரின் மொழி**

தமிழ் முளைக்க வைத்த தொல்காப்பியரும்

இலக்கணத்தை வளர்த்த வந்த நன்னூலாரும்

வாழ்ந்து வாழ்த்திய தமிழ் இது!......

என் போல தமிழை உயிராக கொண்ட ராஜ ராஜ சோழன் அவர் படைப்பை தமிழ் எண்களாக வெளிப்படுத்துகிறார் அதுவும் பெரிய கோவிலாய்!......

பாரதியின் நிலவையும் தாசனின் இனிமையும் என எண்ணற்ற கனிவையும் காண தமிழ் எனக்கு ஓர் அங்கமாய் உள்ளது......

தமிழ் என் மொழியாக இல்லை!

என் உயிரின் உரையாடலாய் உள்ளது ....

எழுத்துக்களை பின்னுவது – வார்த்தையாகலாம் இது போல வாழ்க்கையுடன் சொற்களை பின்னி பின்னி ஆயிரக்கணக்கான குறட்பாவை எழுதினரே! நம் வள்ளுவர்

தமிழின் பெருமையை உணர்த்த......

ச.லெட்சுமிபிரியா
இரண்டாமாண்டு உயிர்வேதியியல்

# INTERESTING FACTS...

Your Brain uses 10 watts of energy of think, and does not Feel pain.

Pizza Hut was the First Pizza chain to OFFer online ordering in 1994

PIZZA HUT

15
Approx. age at which anna wintour established her signature

"Dates" name is derived From the Greek word "Finger".

13%
of cover Featuring celebrities during wintour 1st 5 yrs.

93%
of covers Featuring celebrities over the last 5 yrs.

Some Fish cough. Really.

Favourite cover Model by editor:
Anna wintour
AMBER VALLETTA
17x
Dianavreeland:
BRIGITTE BAUER & JEAN SHRIMPTON

While you sleep you can't smell anything, even really, really bad or potent smells...

A sampling of the 190 Exotic animal in Fashion spreads along side Famous ladies

Cheetah [Kim Basinger, April '88]
Elephant (Keira Knightley, June 07)

No. of times Lauren Hutton has Fronted the Magazines
26
Reigning cover queen

$459
2018
Total Global sales in Mobile commerce

Hippopotamus Milk is pink!

1
Number of hashtages that have appeared on the cover. [April 2014]

KANGAROOS can't walk Backwards!

G.GAYATHIRI
B.COM(CA)

# இராமேஸ்வரம் தீவின் வரலாற்றுத் தகவல்கள்

**முன்னுரை:**

இக்கட்டுரையின் மூலம் இதோ இராமேஸ்வரம் தீவின் வரலாற்றுத்தகவல்கள் சோழப்பேரரசு, சிங்கள மன்னன், பாண்டிய மன்னன் டில்லி சுல்தான், விஜயநகர பேரரசு, போர்ச்சுகல நாட்டவர் சேதுபதி மன்னர், மதுரை நாயக்கர் ஆட்சி ஆங்கிலோ கிழக்கிந்தியர், சுதந்திர இந்தியாவில் இராமேஸ்வரம் தீவு மற்றும் வரலாற்றுத் தகவல்களைப் பற்றி காண்போம்.

**இராமேஸ்வரம் தீவின் வரலாற்றுத் தகவல்கள்:**

100 கோடிக்கு மேல் மக்கள் தொகை கொண்ட இந்திய திருநாட்டின் மொழி கலாச்சார பண்பாடுகளை இணைக்கும் சின்னமாகவும், சுதந்திர இந்தியாவிற்கு முன் 516 சமஸ்தானங்களாக இருந்த காலத்தில் பாரதகண்டம் ஐக்கிய இந்தியாஸ என் மக்கள் மனதில் ஏற்படுத்தக் காரணமாககிருந்தது, இருக்கப்போவது காசி, இராமேஸ்வர தலங்கள் என்றால் அதுமிகையல்ல. வட இந்திய கிராமங்களில் சென்னையை அறிந்தவர்களைவிட இராமேஸ்வரத்தை அறித்தவர்களே அதிகம். இந்து மதத்தின் மீது நம்பிக்கை கொண்ட ஒவ்வொருவரும் முதுமைகாலத்தில் இராமேஸ்வர யாத்திரை வருவார்கள், இங்கு ஸ்ரீ இராமநாதசுவாமி திருக்கோயில் சுமார் 2600 வருட இலக்கியம் மற்றும் வரலாற்று தொன்மை கொண்டது.

**கிமு. 6ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.9 நூற்றாண்டு வரை**

இராமேஸ்வரம் தீவு முற்காலத்தில் சேது, தொல், முதுகோடி என்ற பெயரால் அழைக்கப்பட்டு வந்தது. இப்பகுதியில் வலம்புரி, ,டம'புரிசங்கு, வெள்ளை, கருப்பு, பழுப்பு முத்துக்கள் போன்ற பொருட்கள் 1560 ஆண்டுகளுக்கு முன் விலை உயர்ந்த ஆபரணமாக கருதப்பட்டது. இதை உறுதிப்படுத்தும் வகையில் இராமேஸ்வரத்திற்கு மிக அருகிலுள்ள அழகன்குளம் அகழாய்வு செய்து இத்தாலிய ரோம் நகரத்துடன் நேரடி வாணிய புராதான துறைமுக ஊர் என 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை ALGANKULAM – AN ANCIENT ROMAN PORT CITY OF TAMIL NADU என்ற ஆய்வுநூலை வெளியீடு செய்தது. முற்கால பாண்டியர் காசு, ரோம் நகரகங்களின் காசுகள் மற்றும் பல முத்திரைகள் கண்டறியப்பட்டன. புாம்பன், குந்துகால், ஆரியர்குன்று, கந்தமாதன பருவதம், புளியடிச்சாலை, தென்குடா, ஓலைக்குடா, கரையூர், வேர்க்கொட்டுபகுதி, தனுஷ்கோடி பகுதி என தீவின் பல பகுதிகள் இயற்கை துறைமுகம் ஆக அமைந்துள்ளன.

**சோழப் பேரரசு காலம்:**

கி.பி 932-ல் முற்கால சோழமாமன்னன் பராந்தகன் ராஜராஜசோழனின் தாத்தா இராமேஸ்வரம் வந்து துலாபரம் செய்து வழிபட்டதாக தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் வெளியீடு செய்யப்பட்ட வேளஞ்சேரி செப்புப்பட்டயம் மூலம் தெரியலாம். 2009ல் வரலாற்று ஆய்வுக் கருத்தரங்கம், கி.பி.07ம் நூற்றாண்டு வரலாற்று

அடிப்படையிலான காலம், கி.பி 10, 11ம் நூற்றாண்டுகளில் முதலாம் பராந்தகன் மற்றும் இராஜராஜனால் கட்டப்பட்டவை. இராமேஸ்வரம் இராமநாதசுவாமி கோயிலில் உள்ள கணேசர், ஸ்ரீ இராமர், லக்குவன், சீதை, அனுமர் திருமேனிகள் கி.பி 10.ம் நூற்றாண்டைச் சேர்ந்தவை.

**சிங்கள மன்னர் காலம்**

சிங்கள மன்னன் பராக்கிரமபாகு (கி.பி.1153-186) படைத்தளபதி இராமேஸ்வரம் தீபகற்பத்தை கைப்பற்றி குந்துகாலில் கோட்டை கட்டியிருந்தான். சேது தனுஷ்கோடியில் விஷ்ணுவிற்கு கோயில் கட்டினான் என NUMISMATA ORIENTALIA என்ற ஆய்வுநூலில் கி.பி.1877ம் ஆண்டு T.W. Rhysdavids – அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். சோழ ஆரப்பாக்கம் கல்வெட்டானது சிங்கள பராக்கிரமபாகுவின் படைத்தளபதி இலங்கா புரதண்ட நாயகனால் இராமநாதசுவாமி கோயிலின் சொத்துகள் களவாடப்பட்டதாகவும், கோயிலின் பூசைகள் தடைபட்டதாகவும் குறிப்பிடுகின்றது.

**பாண்டிய மன்னன் காலம்:**

கி.பி. 1263 ல் பாண்டிய மன்னன் திரிபுவனச்சக்கரவர்த்தி சடையவர்மன் சுந்தரபாண்டியன் கல்வெட்டு இராமநாதசுவாமிகோயில் வளாகத்தில் அமைந்துள்ளது என இந்திய அரசு தொல்லியல் துறை கல்வெட்டு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. மீன் சின்னம் பொறிக்கப்பட்ட முத்திரை அணிகலன் அணிந்த ஸ்ரீ இராமர் செப்புத் திருமேனி ஒன்று வழிபாட்டில் உள்ளது. சுடையவர்மன் வீரபாண்டியன் (கி.பி.1263-69) கல்வெட்டு இராமநாதசுவாமி திருக்கோயில் சிதம்பரேஸ்வரர் சன்னதி அமைந்துள்ளது.

**டில்லி சுல்தான் காலம்:**

கி.பி. 1311 ல் டில்லி சுல்தான் அலாவுதீன் கில்ஜியின் படைத்தலைவனான மாலிக்காபூர் இராமேஸ்வரம் கோயிலை உடைத்து விலை மதிப்புமிக்க அணிகலன்களை கொள்ளையிட்டான். கி.பி. 1318 மீண்டும் தில்லி சுல்தான் படையெடுப்பு தளபதி குஸ்ருகான் தலைமையில் கிபி. 1387 முதல் 1365 வரை இராமேஸ்வரம் தீவில் முகமதியர் ஆட்சி நடைப்பெற்றது. அப்போது அபில்காபில் தர்கா மற்றும் பல இஸ்லாமிய வழிபாட்டுத் தலங்கள் தீவு பகுதியில் கட்டப்பட்டது.

**விஜய நகர பேரரசு காலம்**

கி.பி.1371ல் விஜயநகர பேரரசு அரசர் முதலாம் புக்கன் மகன் இரண்டாம் குமார்கம் பணன் இராமேஸ்வரத் தீவை மீட்டு இராமநாதசுவாமி திருக்கோயில் வழிபாட்டுத் தலங்கள் மீண்டும் துவக்கிவைத்தார்.கி.பி.1404ல் விஜயநகர மன்னர் இரண்டாவது ஹரிஹர் சுவாமி தரிசனம் செய்து பணி துவக்கி வைத்தார். கி.பி.1408 விஜயநகர ஆளுநர் கோப்பதிப்பா ஸ்ரீ இராமநாதசுவாமிக்கு இரத்தினகவசம் வழங்கி வழிபாடு செய்தார் .

இலங்கை யாழ்பாண தமிழ் அரசன் பரராஜசேகர ஆரியச்சக்கரவர்த்தி கர்ப்பக்ஹரத்தை திருகோணமலையிருந்து கருங்கல் கொண்டு வந்து செய்தார். கி.பி 1434ல் மேற்கு ராஜகோபுரம் சுமார் 78 அடி உயரத்தில் கட்டப்பட்டது.

கி.பி.1497ல் அரசர் (விஜயநகரம்) நரசிம்மர் இராமேஸ்வரம் வந்து வழிபட்டார். கி.பி. 1532- ல் . பேரரசர் கிருஷ்ண தேவராயர் முப்பத்திரண்டு தானங்கள் செய்து சேது ராமேஸ்வரத்தில் வழிபாடு நடத்தினார்,

**போச்சுகல் நாட்டவர் காலம்:**

கி.பி.1547 இத்தாலிய பாதிரியார் அந்தோணியோ கிருமிநாலிஸ் கிருஸ்தவ சமய பிரச்சாரம் செய்தார். கி.பி 1550 போச்சு நாட்டு யேசு சபை பாதிரியார் கிருஸ்தவ சமய பிரச்சாரம் செய்தார்.

மீன்பிடித்தல் சுண்ணாம்பு தயார் செய்தல், ஒருவகை வேரிலிருந்து சாயம் தயாரித்தல் தொழில் இருந்த ஒரு பிரிவு மீனவ சமுதாயத்தினர் கிருஸ்தவர்களாக மதம் மாறினார்.

**சேது மன்னர் – மதுரை நாயக்கர் ஆட்சிக்காலம்:**

கி.பி. 1605ல் நாயக்கமன்னரால் போகலூர் பகுதி செம்பி குல மறவர் சடைக்கன் உடையன தேவர் என்பவர் சேதுக்காவலர்களாக சேதுபதி என்ற பட்டத்துடன் நியமிக்கப்பட்டார் (கி.பி.1674ல் ரெகுநாத சேதுபதி சுதந்தர சேது சீமையை உருவாக்கினார்). கி.பி. 1773ல் சேதுநாடு புதுக்கோட்டை சீமை, சிவகங்கை சீமை, இராமநாதபுர பெரிய சீமை என மூன்றாக பிரிக்கப்பட்டது.

கி.பி.1722ம் ஆண்டு விஜய ரெகுநாத சேதுபதி அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு செல்ல முத்து விஜயரெகுநாத சேதுபதி அவர்களால் திருப்பணி செய்யப்பட்டு 1972-ல் முத்துராமலிங்க விஜய ரெகுநாத சேதுபதி அவர்கள் காலத்தில் நிறைவு செய்யப்பட்டது. இப்பிரகாரம் மற்ற ஆலயங்களில் அமைப்பை விட முற்றிலும் மாறுப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது. பொதுவாக பிரகாரங்கள் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதியை பார்த்தால் ஒடுங்கி காணப்படும். ஆனால் மூன்றாம் பிரகாரத்தை எங்கிருந்து பார்த்தாலும் ஒரே அமைப்பாகவே காணப்படும். சிவலிங்க வடிவத்தில் பிராகார அமைப்பு அமைக்கப்பட்டுள்ளது. ஊலகத்திலேயே மிகப்பெரிய பிரகாரமாக இன்று வரை அறிவிக்கப்படவில்லை என்பது சேது சீமையின் துரதிஷ்டம்.

நாயக்கர் காலத்தில் மதுரை முதல் தனுஷ்கோடி வரை வண்டிச்சாலைகள் அமைக்கப்பட்டன. சாலை கருங்கல் சுமார் 200கி.மீ நிறமும் 20 அடி அகலத்தினாலும் அமைக்கப்பட்டது. தற்போது மங்கம்மா சாலை என்றும் அழைக்கப்படுகிறது.

**சுதந்திர இந்தியா - இராமேஸ்வரம் தீவு :**

கி.பி.1964ம் வருடம் ஏற்பட்ட புயல் தடுமாற்றத்தினால் தனுஷ்கோடி தெற்கு பகுதி சுமார் 03 கி.மீ கடலில் மூழ்கி அழிந்தது. 1983ல் கப்பல் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. கி.பி.1974ல் மறைந்த இந்திய பிரதமர் இந்திராகாந்தி அம்மையாரால் மண்டபம் பாம்பன் தரைவழிபாலம் அமைக்கப் பணிதுவங்கப்பட்டு 836.கி.பி.1988-ல் மறைந்த பாரத பிரதமர் ராஜீவ்காந்தி – அவர்களால் சாலைப்போக்குவரத்துக்கு திறந்து வைக்கப்பட்டது.

தொன்மைகள் நிறைத்த இராமேஸ்வர தீவில் 1415 சார்பதிவாளர்அலுவலகம், அரசுமருத்துவமனை பாம்பன் கலங்கரைவிளக்குதூண், பஞ்சாயத்து அலுவலகம் பாம்பன் சுங்கதுறை அலுவலகம் என பல வரலாற்று புராதனநகர் தமிழக அரசு அறிவித்து அரசாணை (163) வெளியிடு செய்தது.

கி.பி.1915ல் துவங்கப்பட்ட இராமேஸ்வரம் தேவஸ்தான பாடசாலையில் கி.பி. 1924-ல் மொழியல் பாடப்பிரிவு துவங்கப்பட்டது. 1950ல் தமிழ் புலவர் கல்லூரியாக தரம் உயர்ந்தது. கி.பி. 1975-க்கு பின் காணாமல் போய் விட்டது.

**முடிவுரை**

இராமேஸ்வரம் தீவின் வரலாற்றுத் தகவல்கள் சங்க இலக்கியம், தேவாரகிலக்கியம், சோழப்பேரரசு காலம், சிங்கள மன்னன், பாண்டிய மன்னன் காலம், டில்லி சுல்தான் காலம், விஜயநகர பேரரசு காலம், நாட்டவர் காலம், சேதுபதி மன்னர், நாயக்கர் மதுரை ஆட்சிகாலம் ஆங்கில கிழக்கிந்தியர் காலம், சுதந்திர இந்தியா இவை அனைத்தும் தெளிவாக அறிந்தோம்.

G. சிவராஜ்

துறைத்தலைவர்

கணினி பயன்பாட்டியல்